09.03.2026

CC.89/2017

PW−7, ராஜராஜன் த/பெ. தங்கையா

(எதிரி ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு உதவி வழக்கறிஞர் ஆஜர்)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமான புகார் எங்கு வைத்து யாரால் எழுதப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் நேரடியாக சென்று புகார் கொடுத்ததாக கூறியதின் பேரில் முதல் தகவல் அறிக்கையில் புகார்தாரரின் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி முதல் தகவல் அறிக்கை 06.03.2006ம் தேதி தான் நீதிமன்றத்திற்கு கிடைக்கப்பட்டது என்றால் சரிதான். புகாரில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு எவ்வித மானபங்கமும், கொடுமையோ எந்த வாசகமும் இல்லை என்றால் சரிதான். நான் புகார்தாரரை இருமுறை விசாரித்துள்ளேன். 20.02.2006ம் தேதி அன்று விசாரித்த போது புகார்தாரர் எவ்வித மானபங்கமும் கொடுமையும் ஏற்பட்டதாக சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரரை இரண்டு முறை சம்பவயிடத்தில் வைத்து தான் விசாரித்தேன் என்றால் சரிதான். புகார்தாரர் மருத்துவமனையில் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்கு சிகிச்சை எடுத்ததாக எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். புகார்தாரரின் உடைகளை நான் கைப்பற்றவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் சம்பவ சாட்சிகளான பரமன், தர்மராஜ், தங்கசாமி, சையது அலி, பழனி, குமார் ஆகியோர்களை நான் விசாரித்து எவ்வித வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் எவரையும் வழக்கில் புகார்தாரரை பாலியல் துன்புறுத்தல் எதுவும் செய்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். அவ்வாறு எவ்வித கொடுமையும் ஏற்படாத நிலையில் நான் சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தவறானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த எதிரிக்கும் புகார்தாரருக்கும் இருந்த முன்விரோதத்தை காரணமாக வைத்து புகார்தாரர் கொடுத்த பொய்யான

புகாரை முறையாக விசாரிக்காமல் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**. இல்லை